# <u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்ககிரி</u>

**அசல் வழக்கு எண் 88/2015**

பெயர்: **வெங்கடாசலம்** நாள்: 29.11.2023

பி.வா.சா.1 – முதல் விசாரணை தொடர்ச்சி

பி.வா.சா.1 – வெங்கடாசலம் - சத்திய பிரமாணத்தின் பேரில் முதல் விசாரணை செய்யப்படுகிறார்.

1) 04.10.1929 தேதியிட்ட கிரைய ஆவணம் இணைய வழி சான்றிட்ட நகல் **பி.வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2) 31.12.2010 தேதியிட்ட பாகப்பிரிவினை ஆவணம் பதிவு நகல் **பி.வா.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3) 26.11.2014 தேதியிட்ட தானசெட்டில்மெண்ட் ஆவணம் பதிவு நகல் **பி.வா.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4) பிரதிவாதி மற்றும் அவருடைய தகப்பனார் பெயரில் உள்ள வீட்டு வரி ரசீதுகள் அசல் (12 எண்ணிக்கை) **பி.வா.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

5) பிரதிவாதி மற்றும் அவருடைய தகப்பனார் பெயரில் உள்ள மின் இணைப்பு எண் 659க்கு சம்பந்தப்பட்ட மின் கட்டண ரசீதுகள் அசல் (6 எண்ணிக்கை) **பி.வா.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

6) பிரதிவாதி பெயரில் உள்ள மின் இணைப்பு எண் 2008க்கு சம்பந்தப்பட்ட மின் கட்டண ரசீதுகள் அசல் (6 எண்ணிக்கை) **பி.வா.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

7) சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டம், அ.தாழையூர் கிராம பட்டா எண்கள் 142, 607, 608, 822, 930 ஆகியவைகளுக்கான பட்டா ஆவணம் சான்றிட்ட நகல் **பி.வா.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

8) 18.03.1992 தேதியிட்டு சங்ககிரி எண் 1 மண்டல துணை வட்டாட்சியர் அவர்களின் செயல்முறைகள் சார்வு நகல் **பி.வா.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

9) சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டம், அ.தாழையூர் கிராம பட்டா எண்கள் 65, 737, 881, 141, 266 மற்றும் 354ஆகியவைகளுக்கான பட்டா ஆவணம் இணைய வழி மற்றும் சான்றிட்ட நகல் **பி.வா.சா.ஆ.9** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

10) வருவாய் கோட்டாட்சியர், சங்ககிரி அவர்கள் 12.02.2021 தேதியிட்டு வழங்கிய குறிப்பாணை சார்பு நகல் **பி.வா.சா.ஆ.10** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

11) 23.03.2015 தேதியிட்டு தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின்படி பெறப்பட்ட தகவல் சார்வு நகல் **பி.வா.சா.ஆ.11** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

12) 08.04.2015 தேதியிட்டு தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின்படி பெறப்பட்ட தகவல் சார்வு நகல் **பி.வா.சா.ஆ.12** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

13) 25.06.2015 தேதியிட்டு தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின்படி பெறப்பட்ட தகவல் சார்வு நகல் **பி.வா.சா.ஆ.13** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

14) பிரதிவாதி தகப்பனார் பெயரிலான வணிக வரி ரசீதுகள் (7 எண்ணிக்கை) **பி.வா.சா.ஆ.14** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

15) 31.03.1990 தேதியிட்டு பிரதிவாதியின் தகப்பனாருக்கு வழங்கப்பட்ட வணிக வரி ரசீது **பி.வா.சா.ஆ.15** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

16) 12.12.2014 தேதியிட்டு சங்ககிரி வட்ட அலுவலக மண்டல துணை வட்டாட்சியர் அவர்களின் நடவடிக்கை சார்வு நகல் **பி.வா.சா.ஆ.16** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

(பி.வா.சா.ஆ,1, 5, 6 ஆவணங்கள் இந்த வழக்கு சர்வே எண்ணுக்கு சம்பந்தப்பட்ட ஆவணம் இல்லையென்றும், பி.வா.சா.ஆ.2 ஆவணம் 3ம் தரப்பினருக்கு பாத்தியப்பட்ட ஆவணம் என்பதால் மேற்படி பி.வா.சா.ஆ.1, 2 ஆவணங்களை குறியீடு செய்ய முடியாது என்றும், பி.வா.சா.ஆ.7 ஆவணம் வழக்கிற்காக மோசடியாக ஏற்படுத்தப்பட்ட ஆவணம் என்றும், பி.வா.சா.ஆ.8, 10, 16 ஆவணங்கள் நீதிமன்ற உத்தரவிற்கு கட்டுப்பட்ட ஆவணங்கள் என்றும், ஆகையால் மேற்படி ஆவணங்களை குறியீடு செய்ய முடியாது என்ற வாதி தரப்பு ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்பட்டது, வாதி தரப்பு ஆட்சேபனை குறித்து வழக்கின் இறுதியில் தீர்ப்பில் முடிவு செய்யப்படும்)

வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க பி.வா.சா.1ன் குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

ஒப்பம்/வெங்கடாசலம்

ஒப்பம்/திரு.ஆர்.ராதாகிருஷ்ணன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்ககிரி.